REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்!

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 22உ செவ்வாய் (4—6—57) ★ ★ வெளியூர்: வைகாசி 23உ புதன் (5—6—57) [இதழ் 305

நீந்தத் தெரிய வேண்டும்!

பாட்னு, ஜுன் 3—

பீகார் மாநிலத்தில் சிவில் சர்வீஸ் உத்தியோகங்கள் ஊர்ஜிதமாவதற்கு நீச்சல் பயிற்சி அத்தாட்சி பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

ஆண்டுதோறும் மாநிலத்தில் வெள்ளத்தினல் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு அதிகாரிகளை அனுப்பநேரிடுவதே இதற்குக் காரணம் என்று தெரியவருகிறது.

மொரார்ஜி தேசாய்க்கு கோட்டையா தரும் பதில்

'சர்க்கார் தங்கள் கொள்கையைத் திருத்திக்கொள்ளட்டும்'

கைத்தறிகள் வேலை செய்ய வழி செய்யாமல் எச்சரிக்கைத் தருவது நியாயமா?

நியாய விலையில் நூல் வேண்டும்

தறிகள் இயங்க முதலீடு உதவி தேவை

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அளவு துணியை, திட்டகாலத்தில் நெய்து தராவிட்டால், அந்தக் 'கோட்டா'வை ஆலைகளுக்கு ஒதுக்கிவிடுவோம் என்று டில்லி மந்திரி மொரார்ஜி தேசாய் பயமுறுத்தியிருந்தார் அல்லவா? அவருக்கு, ஆந்திர மாநில கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர், பிரகதகோட்டையா அவர்கள் பதில் தந்திருக்கிறார். அவர் சென்னை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 4-6-57-ந் தேதிய இதழில் எழுதியுள்ள கடிதத்தில் காணப்படும் அப்பதில், கீழே தரப்படுகிறது:—

"மொரார்ஜி பயமுறுத்துகிறார்; துரதிருஷ்டவசமான அச்சம் இது. ஆனால், உண்மைகள் வேறுவிதமானவை.

"நாட்டில் இப்போதுள்ள 28 இலட்சம் கைத்தறிகளுக்கும், ஆண்டொன்றுக்கு 300 நாட்களுக்கு, ஆலைகளுக்குக் கிடைக்கும் நியாயமான விலையில் நூல்கள் தரப்படுவது, வீழ்ச்சியுற்ற காலத்திலும் தொடர்ந்து வேலை செய்ய தேவையான முதலீடு, மற்றும், சேலைகளையும் வேட்டிகளையும் ஒதுக்கித் தருதல் போன்ற வசதிகள் செய்து தரப்பட்டால் கைத்தறிகள் நிச்சயம் ஆண்டொன்றுக்கு 500 கோடி கெசம் துணி நெய்துதர முடியும். ஆனால், சர்க்கார், உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு எந்தவித திட்டமும் வைத்திருக்கவில்லை, எங்களது திட்டத்தையும் ஏற்க மறுக்கிறார்கள்.

"கூட்டுறவு சங்கங்களுக்கு வெளியிலும், உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி செய்தாக வேண்டும். இலட்சக் கணக்கான கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தில் இல்லாத காரணத்தால், ஆதரிக்கப்படாமல் விட்டால் நிலைமை உற்சாகப்படக்கூடியதாயிருக்க முடியாது.

"இப்போதுள்ள கூட்டுறவு சங்கங்கள் வெளியில் உள்ள எல்லா தறிகளையும் அணைத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், ஏற்கனவே, அவை தங்களிடமுள்ள சொற்பத் தறிகளுக்கே முழு வேலை தரமுடியவில்லை; முழு வேலை தருவதற்கு முதலீடு கிடைக்கவில்லை; சர்க்கார் முதலீடு கிடைக்க வழிசெய்யவில்லை.

"ஆந்திராவில் கூட்டுறவு சங்கங்களில் இணைந்துள்ள ஒன்றரை இலட்சம் தறிக்காரர்களில், 50,000 பேருக்குத்தான் வேலை கிடைக்கிறது. எஞ்சியோர் வேறு வேலை தேடவேண்டியவராயிருக்கின்றனர்.

"எனவேதான் ஒன்றரை இலட்சம் தறிகளுக்கும், தறி ஒன்றுக்கு ரூ. 300 வீதம், முதலீடு தரவேண்டுவது சர்க்காருக்கு அவசியமாகிறது.

"'ரிபேட்' தருவது என்பது ஓரளவுக்கு கூட்டுறவு சங்கங்களில் உள்ள நெசவாளருக்கு பயன் தருகிறது. ஆனால், வெளியில் உள்ள நெசவாளர்கள் தங்கள் உற்பத்தியை குறைந்த விலைக்கு விற்கவேண்டியிருக்கிறது. எனவே, இப்போதைய 'ரிபேட்' முறைக்குப் பதிலாக, 'விலைக்கு ஊக்கம்' தரும் முறையாக மாற்றியமைக்கவேண்டியுள்ளது.

"எல்லா கைத்தறித் துணிகளையும் சர்க்காரே வாங்கிக்கொள்வதின் மூலம், நெசவாளருக்கு தொடர்ந்த வேலையும், ஊதிய உறுதியும் அளிக்கலாம்.

"இந்தவிதமான ஒரு திட்டத்தை சர்க்கார் பின்பற்றுவதானல், உற்பத்தி ஆண்டொன்றுக்கு 500 கோடி கெசமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

"சர்க்கார் தங்கள் கொள்கையை புனராலோசனை செய்து புதுப்பித்துக் கொள்ளட்டும். அப்போது நாங்கள், எங்கள் முழு ஒத்துழைப்பையும் தரத் தயாராக இருக்கிறோம்."

கடல் அரிப்பு அபாயம்

ஏழை குடும்பங்களின் அவதி

தனுஷ்கோடி, ஜுன் 3—

கடலரிப்பின் காரணமாக சென்ற வாரம் தனுஷ்கோடி இரயில் தண்டவாளத்திற்கு தென் புறமாயுள்ள பகுதியில் நீர் நிரம்பிவிட்டது தெரிந்ததே.

கடற்கரையோரமாகக் குடியிருந்த மக்களை அதிகாரிகள் அப்புறப்படுத்தினர்.

இரயில்வே வைத்திய விடுதிக்கு அருகில் உள்ள இடங்களில் அவர்களுக்கு குடியிருக்க வசதி செய்து தரப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்த 20 குடும்பங்களுக்குப் புறம்போக்கு நிலங்களில் குடியிருக்க அரசாங்கம் வசதி செய்துவருகிறது.

ஆண்டுதோறும் இவ்வாறு கடலரிப்பு ஏற்படுவதும், கடல் நீர் நிரம்புவதும் சாதாரணமாகிவிட்டது. இந்த ஆண்டு 20 அடிகள் வரை அரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வரவுக்கு மிஞ்சி செலவா?

புதுடில்லி, ஜுன் 2—

"பற்றாக்குறையை சமாளிக்க மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் உதவிபுரிய வேண்டியது அவசியமே. ஆனால் ஆண்டுதோறும் பற்றாக்குறை வரவு—செலவு திட்டத்தையே மாநிலங்கள் தயாரித்து வருகின்றன. மாநிலங்கள் வரவுக்கு அதிகமாக செலவு செய்வதும், மத்திய அரசாங்கத்திடம் பணம் கேட்பதும் மேலும் கஷ்டங்களை அதிகரித்து வருகின்றன;" என்று பண்டித நேரு மாநில அரசுகளின் பொறுப்பை பற்றி எடுத்துரைத்து, மாநிலங்கள் அடிக்கடி பணம் கேட்டு தொந்தரவு செய்யக் கூடாது என்று வலியுறுத்திப் பேசியுள்ளார்.

10 இலட்சம் பேருக்கு ஆயுள் குறையும்

அணு சோதனைகள் பற்றி அமெரிக்க விஞ்ஞானி

லாஸ் என்ஜலஸ், ஜுன் 3—

ஹிரோஷிமா, நாகசாகி நகரங்கள் அணுகுண்டுகளால் தாக்கப்பட்ட நேரத்தில் உயிருடன் தப்பியவர்களை கண்காணித்து ஆராய்ந்துவந்ததில் சில முக்கிய விஷயங்கள் வெளியாகியுள்ளன. அந்த உண்மைகளைப் பற்றி நோபல் பரிசு பெற்ற அமெரிக்க விஞ்ஞானி எச்சரித்துள்ளார்.

அணுகுண்டு சோதனைகளை நிறுத்தாவிடில் 10 இலட்சம் பேர்களின் ஆயுள் காலம் 5 முதல் 10 வருடம் வரை குறைந்துவிடும் என்று டாக்டர் லின்ஸ்பாலிஸ் தெரிவித்துள்ளார்.

அடுத்த 20 தலைமுறைகளில் 20 இலட்சம் குழந்தைகள் கதிரியக்க விளைவுகளின் காரணமாக உடலிலோ, உள்ளத்திலோ குறைபாடுகள் உள்ளனவாகயிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கதிரியக்கத்தினால் புற்றுநோயும், 'லூகேமியா'வும் பாவக்கூடும் என்றும் எச்சரித்துள்ளார்.

அணுகுண்டு சோதனைகளை நிறுத்தவேண்டும் என்று விஞ்ஞானிகள் பொதுவாக தெரிவிக்க முற்பட்டுவிட்டனர் என்பதற்கு இது போதுமானது.

சென்னை-ஆந்திர எல்லைத் தகராறு

ஐதராபாத், ஜுன் 3—

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறு பற்றி நல்ல முடிவுகாண முன்பு மத்திய சட்டசபை அமைச்சராயிருந்த படாஸ்கர் நியமனம் செய்யப்பட்டது தெரிந்ததே.

அவர் சென்னை அரசாங்கத்தின் அமைச்சர்களுடன் எல்லைத் தகராறு பற்றி கலந்தாலோசித்ததும் தெரிந்ததே.

இத்திங்கள் 8-ம் தேதி அவர் இது சம்பந்தமாக ஆந்திர மாநிலம் செல்கிறார். ஜுன் 15-ம் தேதிக்குள் அவர் தன் தீர்ப்பை மத்திய அரசாங்கத்திற்கு அளிப்பார் என்றும் தெரியவருகிறது.

"படாஸ்கரிடம் தெரிவிக்க வேண்டிய விஷயங்களைப் பற்றி ஆராய ஆந்திர மாநிலத்தின் முக்கியஸ்தர்களின் கூட்டம் ஒன்று இத்திங்கள் 6-ம் நாள் கூட்டப்பட்டுள்ளது,' என்று ஆந்திர மாநில ரெவினியூ அமைச்சர் காளா வெங்கட்ராவ் தெரிவித்துள்ளார்.

இலங்கை செல்ல தில்லைவில்லாளனுக்குத் தடை!

சிதம்பரம் ஜுன் 4—

சென்ற ஆண்டு பொங்கல் திருநாளில் கலந்துகொள்ள இலங்கைத் தோழர்கள் தோழர் தில்லைவில்லாளன் அவர்களை அழைத்திருந்தார்கள். 8-1-56-ல் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு தந்தியும் அடித்திருந்தார்கள். அதற்கு முன் கூட்டியே, முறைப்படி இலங்கை செல்ல 'பாஸ்போர்ட்'டுக்கு விண்ணப்பம் செய்திருந்தார் தோழர் வில்லாளன். முறைப்படி போலீஸ் அதிகாரிகள் விசாரித்தார்கள்; கலெக்டர் அலுவலகத்திலிருந்தும் விண்ணப்பம் சம்பந்தப்பட்ட 'ரிகார்டுகள்' சென்னை 'பாஸ்போர்ட்' தரும் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டன. நேரில் சென்று விசாரிக்கவும் அறியவும் முயற்சிக்கப்பட்டது. இதற்குள் பொங்கல் போய் விட்டது!

'பாஸ்போர்ட்' தரும் அலுவலகம், மாநில சர்க்கார் பார்வையிலிருந்து மத்திய சர்க்கார் நேரடி நிர்வாகத்தின்கீழ் வந்தது.

மீண்டும் படையெடுப்பு—விண்ணப்பம் பழையபடி கலெக்டருக்கு திருப்பப்பட்டது—போலீஸ் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது — என்று அறிவித்தனர்.

பிறகு விசாரிப்பு-இப்போது மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

மாதங்கள் ஓடின—ஆண்டும் முடிந்தது. அடுத்த பொங்கலும் வந்தது. அழைப்பு விடுத்த தோழர் மா. முருகன் எழுதி எழுதி அலுத்து ஓய்ந்துவிட்டார்.

கடைசியில் மலையைக் கெல்லி எலியைப் பிடித்ததுபோல், 17—5—57-ல் பதில் அனுப்பியிருக்கிறார்கள். என்ன தெரியுமா?

"It is regretted that passport facilities applied for by you cannot be granted."

(தாங்கள் விண்ணப்பித்திருந்த 'பாஸ்போர்ட்' வசதி தர முடியாததற்கு வருந்துகிறோம்) என்று!

ஏன்—என்பதற்கு விளக்கமில்லை இந்த 'சுதந்தர' சர்க்காரில்!

ஒரு தனி மனிதருக்கு அண்டை நாட்டிற்குச் சென்று வரக்கூட 'சுதந்தரம்' இல்லையா? இந்தப் பதிலைச் சொல்ல ஒரு ஆண்டு தேவையா?

சென்னை, ஜுன் 3—.

குழந்தைகள் விடுதிச் செலவுக்காக 1957-58-ம் ஆண்டுக்குரிய தொகையான ரூ. 50,000-த்தை சென்னை அரசாங்கம், சென்னை நகரசபைக்குக் கொடுக்க அனுமதி அளித்துள்ளது என்று தெரியவருகிறது.

Best copy available.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 4—6—57 செவ்வாய்

சமுதாயத்தைக் காப்பீர்!

அணு ஆயுதங்கள் உலக சமாதானத்திற்கு வழி காட்டுகின்றன என்றும் போர் மூளுவதை தடுக்கப் பயன்படுகின்றன என்றும் பற்பல காரணங்கள் காட்டி அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா ஆகிய வல்லரசுகள் அடிக்கடி அணு ஆயுதச் சோதனைகளில் ஈடுபட்டுவந்துள்ளன.

ஹிரோஷிமா, நாகசாகி பகுதிகளில் அணுகுண்டு போடப்பட்ட நேரத்தில் ஆசிய மக்கள் துடித்தெழுந்து கண்டனம் தெரிவித்தனர். ஆனல் அந்த கண்டனக் குரலுக்கு வல்லரசுகள் செவி சாய்க்கவில்லை.

இன்றுவரை 10 கோடி டன் டி. என். டி. வெடிமருந்துக்குச் சமமான அணு ஆயுதங்களை மூன்று வல்லரசுகளும் வெடித்திருக்கின்றன. 10 பெரிய ஹைட்ரஜன் குண்டுகளும் சுமார் 100 சிறு அணு ஆயுதங்களையும் வல்லரசுகள் வெடித்துள்ளதாக கணக்கிடப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிய நாடுகளின் ஏகோபித்த எதிர்ப்பை அலட்சியப்படுத்தி, பிரிட்டன் பசிபிக் கடலில் மீண்டும் ஓர் நீர்வளிக் குண்டை வெடித்து சோதனை நடத்தியுள்ளது. இதன் விளைவாக நீரிலும் காற்றிலும் நஞ்சு பெய்யப்பட்டு மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளனர். ஜப்பானிய அரசாங்கம் இந்த நடவடிக்கையைக் கண்டித்தும் பயனற்றுப் போயிற்று.

அணுகுண்டு சோதனைகள் மக்களை எவ்வளவு பாதிக்கிறது என்பதற்கு ஜப்பானிய மக்கள் அனுபவத்தில் அடைந்த தீராத் துயரங்களும் சோக முடிவுகளும் போதிய சான்ருகும்.

வல்லரசுகளுக்கிடையே அணு ஆயுதப் போட்டி பெருகிவருவதும், தங்களிடம் எத்தகைய ஆயுதம் உள்ளது என்பதை எடுத்துக்காட்டவே இந்த அணு ஆயுதச் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மனித சமுதாயத்தை நாசப்படுத்தும் முயற்சியே அணு ஆயுதச் சோதனைகள் என்று உலக விஞ்ஞானிகள் கண்டித்தும், விஞ்ஞானம் மனித சமுதாயத்தின் நன்மைக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்று டாக்டர் இராமன் போன்றவர்கள் சுட்டிக்காட்டியும், உலகத்தில் உள்ள மற்ற நாடுகளும், சமுதாயத்தின் நலனில் அக்கறை கொண்டோரும், எதிர்காலம் நல்லபடி அமைய வேண்டும் என்று விரும்பும் அரசியல் தலைவர்களும் இந்த வல்லரசுகளின் பிடிவாதப் போக்கைக் கடுமையாகக் கண்டித்து மனித சமுதாயத்திற்கு இழைக்கப்படும் தீங்கை அகற்ற அவ்வப்போது பாடுபட்டுள்ளனர். காலஞ்சென்ற விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன், இதனுல் ஏற்படும் ஆபத்தை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டி மறைந்தார். இன்று மேற்கு நாடுகளில் அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளும் ஐன்ஸ்டீன் கூறிய முடிவையே ஏற்றுக்கொள்கின்றனர். இதுவரை வெடிக்கப்பட்டுள்ள அணு குண்டுகளால் பலர் மாண்டுபோகவும், பலர் குஷ்டம் போன்ற கொடிய வியாதிக்கு ஆளாகவும் நேரும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வல்லரசுகளின் பிடிவாதப் போக்கினுல் ஆசிய மக்கள் அவதியுறவேண்டும் என்பது என்ன நியாயம்? உலகெங்கும் அணு ஆயுத சோதனைகள் தடை செய்யப்படவேண்டும் என்று கோரியிருந்தும், வல்லரசுகள் நியாயமான முறையில் கோரிக்கையை ஏற்கவும் சோதனைகளைக் கைவிடவும் முன்வராது, மக்களின் விருப்பத்தை அலட்சியப்படுத்தி, தொடர்ந்து சோதனைகளில் ஈடுபடுவது என்ன நியாயமாகும்? இப்படி மனித சமுதாயத்திற்கே அக்கிரமம் இழைக்கப்படுவதை இனியும் நீடிக்கவிடுவதானுல், எதிர்காலத்தில் கேடுகளும், நாசமும் நிச்சயம் மனித சமுதாயத்திற்கும், உலகத்திற்கும் ஏற்படும் என்பதில் சந்தேகமிருக்க இடமில்லை.

அணு ஆயுதங்களால் உலக சமாதானம் நிலவச் செய்ய முடியும் என்ற வாதத்தைக் காட்டி, தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளில் ஈடுபடுவது அறிவுடைமையாகாது. அணுசக்தியை நாசவேலைக்கு பயன்படுத்தக்கூடாது என்ற முடிவிற்கு விஞ்ஞானிகள் வர வேண்டும்.

மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும், மற்ற ஆக்க வேலைகளுக்கும், அணு சக்தியை பயன்படுத்தவேண்டும். அதுவே அறிவுடைமை—செயதக்கச் செயல்—பயன் தரும் நற்காரியமும் ஆகும். விஞ்ஞானம் மனிதனுக்கு எண்ணற்ற நன்மைகளையும், பற்பல வசதிகளையும் செய்துள்ளது போல, எதிர்காலத்தில் மனித சமுதாயத்திற்கு போற்றத்தக்க சாதனைகளை வல்லரசுகளின் அணு ஆராய்ச்சித் தரும் என்றே உலக மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டவர் எதிர்பார்ப்பர்.

இந்த அளவிற்கு நன்மை ஏற்படாவிட்டாலும், நிச்சயம் இப்போது நிலவிடும் தீமையேனும் இழைக்கப்படாமல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறேம்.

காலமறிந்து செயலாற்ற பிரிட்டனின் முடிவு

லண்டன், மே 31—

கொரியா போரில் தலையிட்டதைத் தொடர்ந்து கம்யூனிஸ்டு சீனவுக்கு இராணுவ முக்கியத்துவமுள்ள பொருட்களை அனுப்பக்கூடாது என்று ஐ. நா. தடை விதித்திருந்தது.

இப்போது அந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்துவதென பிரிட்டன் முடிவு செய்திருக்கிறது.

'ரஷ்யாவுடனும், மற்றக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் வர்த்தகம் நடத்திவருவதைப் போன்ற அடிப்படையிலேயே கம்யூனிஸ்டு சீனவுடனும் பிரிட்டன் வாத்தகம் நடத்திவரும்' என்று பிரிட்டன் வெளிநாட்டு அமைச்சர் காமன்ஸ் சபையில் அறிவித்துள்ளார்.

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கும் ஆட்சியின் குருமார்கள்!

காவடி தூக்கிச் சென்று சேவடி தாங்கி நிற்கும் மாநில ஆட்சியின் சிஷ்யர்கள்!

இவர்கள் சேவடி தாங்கி நிற்பதற்காக நம்முடைய வரிப்பணம் டெல்லிக்குப் போகவேண்டுமா?

பம்பாயிலும் கல்கத்தாவிலும் எண்ணெயா ஊறுகிறது? அங்கு மட்டும் தொழிற்சாலை?

கனிவளம்—நீர்வளம்--மலை வளம்--எண்ணெய் வளமுண்டு இங்கே; திட்டங்கள் ஒன்றுமில்லை!

உண்மைநிலை எடுத்துக்காட்டி பொதுச்செயலாளர்

29—5—57 மாலை சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில், புது வரிகளைக் கண்டித்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு இரு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது :—

எஞ்சினியர்கள் 2,000 பேர்!

பக்ரா-நங்கல் திட்டத்தை பார்வையிட்டுவிட்டு, 7, 8 மாத காலத்திற்கு முன்னுல், பண்டித நேரு அளகாபாத் கூட்டத்தில் குறிப்பிட்டார்—'இரண்டு நாட்களுக்குமுன் பக்ரா-நங்கல் திட்டத்தைப் பார்த்து நானே பிரமித்தேன். உலகத்தில் இரண்டாவது பெரிய திட்டம் பக்ரா-நங்கல் திட்டம்; அங்கு வேலை செய்யும் 'எஞ்சினியர்'கள் மட்டும் 2,000 பேர்,'—என்று!

"எஞ்சினியர்கள் மட்டும் 2,000 பேர் என்ருல், 'ஓவர்சியர் எவ்வளவு பேர்—மேஸ்திரிகள் எவ்வளவு பேர் இருப்பார்கள்—மற்ற தொழிலாளர்கள் எவ்வளவு பேர் இருப்பார்கள்—நீங்களே கணக்குப்போட்டுக் கொள்ளுங்கள்.

எதற்கோ?

"இத்திட்டம் ரூ. 176 கோடி திட்டம்—வரி போடுவதற்குமுன்! அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் எப்படியிருக்குமென்று சொல்லும்பொழுது சொல்லுகிருர் பண்டித நேரு—அங்கு உற்பத்தியாகும் மின்சாரம் வட இந்தியா முழுவதிற்கும் பயன்படும்,'—என்று! இங்கே வாராதாம்! ரூ 176 கோடி திட்டம்! இதற்கு நாமும் வரிப் பணம் கொடுக்க வேண்டும்!

வடக்கிலே வளர்ச்சி

"இன்னென்றும் உங்களுக்கு உணர்த்த ஆசைப்படுகிறேன்—ஏற்கெனவே டாடா இரும்பு கம்பெனி அங்கிருக்கிறது; ரூ. 10 கோடி நிகர வருமானமுடைய பெரியதொரு கம்பெனி அங்கிருக்கிறது. அதைத் தவிர நான்கு பெரிய இரும்புத் தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிருர்கள் இந்திய சர்க்கார்; அதன் விவரம்—ரூர்கேலா என்ற இடத்தில் ரூ. 128 கோடியிலும்; பிலாய் என்ற இடத்தில் ரூ. 110 கோடியிலும்; துர்காப்பூர் என்ற இடத்தில் ரூ. 115 கோடியிலும்; இப்பொழுது பீகாரில் பொக்காரா என்ற இடத்தில் ஏறத்தாழ ரூ. 100 கோடியிலும் ஆரம்பித்திருக்கிருர்கள்.

இலட்சணமே இலட்சணம்

"நமக்கும் இங்கே ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க இடம் கொடுத்திருக்கிருர்கள் ரூ. 1¾ இலட்சத்திற்கு! என்ன தொழிற்சாலை என்ருல் அப்பளத் தொழிற்சாலை! ஆனுல், நாம் கொடுக்கும் வரிப் பணத்தில் பெரும் பெரும் தொழிற்சாலைகள் அங்கே!"

"இங்கு சென்னட்டில்—மைசூரில் ஒரு தொழிற்சாலை விருத்தி செய்வதற்காக ரூ. 6 கோடி தந்திருக்கிருர்கள்.

"வடநாடாவது—தென்னுடாவது என்று கூறுகிற என் அருமை காங்கிரஸ் நண்பர்களிடத்தில், இருதயத்தில் நேர்மை—நாணயம் இருந்தால் அவர்களை நான் சிந்திக்கச் சொல்லுகின்றேன்; நல்லறிவுபடைத்தவர்களை சிந்திக்கச் சொல்லுகின்றேன்!

கடைத் தேங்காய் வழிப் பிள்ளையாருக்கா?

"எங்கேயோ திட்டம் நிறைவேற இருங்கிருப்பவன் கொடுக்க வேண்டுமா? யார் யாருக்கு அந்தத் திட்டத்தில் பலன் உண்டோ அந்தந்த மக்களுக்கு 'செஸ்' வரி போட்டு வசூலித்து, அந்தந்த திட்டங்களை கட்டுவதுதான் நியாயமே தவிர எங்கேயோ கட்டுவதற்கு இங்கிருப்பவர்கள் கொடுக்க வேண்டுமா? 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கா உடைப்பது?' இங்கிருப்பவர்களிடம் வரிப் பணம் வசூலித்து அங்கேயா அணைகட்டு கட்டுவது?

எல்லாம் அங்கே!

"இதைத் தவிர, சித்தரஞ்சன் என்ற இடத்தில் பல கோடி ரூபாயில் இஞ்சின் செய்யும் தொழிற்சாலை; சிந்திரி என்ற இடத்தில் 28 கோடி ரூபாயில் உரத் தொழிற்சாலை; பம்பாயில் 100 கோடி ரூபாய்க்கு மேல் ஆயில் சுத்திகரிப்புத் தொழிற்சாலை; கல்கத்தாவில் ஒரு சுத்திகரிப்புத் தொழிற்சாலை 100 கோடி ரூபாய்க்கு மேல்; 'பென்சிலின் பேக்டரி' ரூ 5 கோடிக்குமேல்; துப்பாக்கிக் குண்டுகள்—மருந்துகள் செய்யும் தொழிற்சாலை 5 கோடி ரூபாய்க்கு மேல்; எல்லாம் அங்கே!

இங்கே உள்ள பெரும் தொழிற்சாலைகள்!

"இங்கு பெரும் தொழிற்சாலைகளென அவர்கள் சுட்டிக் காட்டுவது பெரம்பூர் 'கோச் பேக்டரி' 8 கோடி ரூபாய்க்குமேல்; பெங்களூரில் 2½ கோடி ரூபாயில் இருக்கும் 'டெலிபோன் பேக்டரி; இவ்வளவுதான் இங்கே!

இரும்பு—நிலக்கரி ஏராளமாக உண்டு!

"இங்கு சேலத்தில் சேர்வராயன் மலையில், கஞ்ச மலையில் இரும்பு கிடைக்கிறது; தென்னுற்காடு நெய்வேலியிலே 200 கோடி டன்னுக்கு நிலக்கரி கிடைக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10 இலட்சம் டன் வெட்டியெடுத்தால் 2000 ஆண்டுவரை வெட்டியெடுக்கலாமாம் — இப்பொழுது கண்டுபிடித்து சொல்லியருக்கிருர்கள் நிபுணர்கள்!

ஆனுல், அதிலும் 75 பங்கு டெல்லிக்குத்தான்!

"நிலக்கரியையும் வெட்டியெடுத்த பாடில்லை; வெட்டியெடுத்தாலும் அதில் வரும் இலாபம் 75 பங்கு டெல்லிக்குப் போகுமாம்!

இங்கு போதிய நிலைமையில்லையாம்!

"சேர்வராயன்—கஞ்சமலைகளிலிருந்து இரும்பு எடுத்து ஏன் இரும்புத் தொழிற்சாலை வைக்கவில்லை என்ருல், 'போதிய நிலைமை யில்லை' என்று சொல்லிவிட்டு, 4-வது தொழிற்சாலையும் அங்குதான் வைத்தார்கள். இங்கிருக்கும் அமைச்சர்களைக் கேட்டால் சமாதானம் சொல்லுகிருர்கள்.

எங்கே கட்டுவது... ஐயோ! அறிவே!

"ஒரு அமைச்சர் கேட்டாராம், 'இங்கு அணைக்கட்டுகட்டுவதென்ருல்எங்கே கட்டுவது? நெடுஞ்செழியன் வீட்டு சாக்கடைக்கும்—அண்ணுதுரை வீட்டு சாக்கடைக்குமா கட்டுவது?' என்று கேட்டாராம். எவ்வளவு அறிவுத் தெளிவு! எப்படிப்பட்டவர்கள் இன்றைய ஆட்சி பீடத்திலிருக்கிருர்கள்!

சமாதானம் சொல்லுகிருர்கள்

"எங்கள் வீட்டு சாக்கடைகள் அவ்வளவு பெரிதல்ல! ஆனுல் அந்தளவாவது கட்டத் தெரியுமா உங்களுக்கு?

"அங்கேதானே ஆறுகள் ஓடுகின்றன அங்கேதானே கட்ட வேண்டும் என்ற முறையில் அமைச்சர்கள் சமாதானம் சொல்லுகிருர்கள்.

போகின்றதா வரிப்பணம்?

"பாகிஸ்தானத்தில் பெரிய ஆறுகள் ஓடுகின்றன என்பதற்காக தென்னுட்டு வரிப் பணம் அங்கு போகின்றதா? பர்மாவில் பெரிய நதியான ஐராவதி நதி ஓடுகிறதற்காக தென்னுட்டு வரிப் பணம் அங்கு போகின்றதா? நைல் நதி ஓடுகிறது, எகிப்திலே; நாசர் கஷ்டப்படுகிருர் அஸ்வான் அணைக்கட்டு கட்ட; சூயஸ் கால்வாயை பிறர் எடுத்துக்கொள்ளும் அளவுக்கு அவர் அவதிப்படுகிருர்; எனவே அவர் கொஞ்சம் சுகம் அனுபவிக்கட்டும்; அங்கு பெரிய நதி ஓடுகிறது—இங்கு இல்லை என்பதற்காக நம்முடைய நாட்டு வரிப் பணம் எகிப்துக்குச் செல்லுகின்றதா?

ஆனுல் வடநாட்டுக்கு மட்டும்...

"ஆனுல் வடநாட்டுக்கு மட்டும் செல்ல வேண்டும் — அங்கு கங்கை, சிந்து, யமுனை, பிரம்மபுத்திரா நதிகள் ஓடுகின்றன என்பதற்காக!

நாம் அடிமைகள் தானே?

"அங்கு நம் நாட்டு வரிப் பணத்தை அனுப்புகிறேம் என்ருல் நாம் அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறேம் என்று பொருள். இவர்கள் இங்கிருந்து காவடி தூக்கிச் சென்று அவர்களின் சேவடி தாங்கி நிற்கிருர்கள் என்பதற்காக நமது வரிப் பணம் அங்கு போக வேண்டுமா?

அங்கு மட்டும் எண்ணெய் ஊறுகிறதா?

"பம்பாயிலும், கல்கத்தாவிலும் எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை வைத்திருக்கிருர்கள் ரூ. 100-க்கு மேல் செலவிட்டு. நான் கேட்கிறேன்—நிதியமைச்

(3-ம் பக்கம் பார்க்க.)

தஞ்சை மாவட்டத்தில் என். வி. நடராசன்

ஆண்டான்கோவில் :

வலங்கிமான் அடுத்த ஆண்டான்கோவில் தி. மு. கழகத் துவக்க விழா 21—5—57 மாலை சிறப்புற நடந்தேறியது. விவசாயத் தொழிலாளர் உள்ளிட்ட ஏராளமான தோழர்களும் தாய்மார்களும் திரண்டிருந்தனர்.

இவ்விழாவில் துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கலந்துகொண்டு விரிவுரையாற்றியதுடன், கழகக் கொடிகளையும் ஏற்றிவைத்தார். இக்கூட்டத்தில் குடவாசல் கிருஷ்ணமூர்த்தி, குடந்தை பத்மநாபன், அப்துல்லா ஆகியோரும் பேசினர். துவக்கத்தில் ஊர்வலமும் நடைபெற்றது.

பல சார்பு மன்றங்களும், கிளைக் கழகங்களும் துணைப் பொதுச் செயலாளருக்கு கைத்தறித்துண்டுகள், மலர் மாலைகள் அணிவித்தன. சிறுவன் இராசேந்திரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினான்.

ஆலங்குடி :

குடந்தை அடுத்த ஆலங்குடி தி. மு. கழகச் சார்பில் 22-5-57 மாலை பொதுக்கூட்டம் ஒன்று கடைவீதி அடுத்த திடலில் நடைபெற்றது. குடந்தை தோழர் பத்மநாபன் தலைமை வகித்தார். தோழர்கள் ஏ. எஸ். பி. சாமி, அயூப்கான் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியபின் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மத்திய சர்க்காரின் வரிக் கொடுமைகளை விவரித்தும் கண்டித்தும் பேசியதுடன் இந்த வரிக் கொடுமையை எதிர்க்க கிராம மக்களும், பாட்டாளி மக்களும் திரண்டெழவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். விவசாயத் தொழிலாளர்கள், தி. மு. கழகக் கிளைகள் துணைப் பொதுச்செயலாளருக்கு மலர் மாலைகள், கைத்தறித் துண்டுகள் அணிவித்தன.

தேவனுஞ்சேரி :

ஆடுதுறை வட்டம் - தேவனுஞ்சேரி தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா 23—5—57 மாலை கடைத் தெருவில் அமைத்திருந்த மேடையில் இனிது நடைபெற்றது. கிராம மக்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர். ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. சு. முனியாண்டி தலைமை வகித்தார். தோழர்கள் பொ. தருமன், கோ. சி. மணி, காளிதாஸ், குடந்தை - பத்மநாபன், த. பழுவூர் - இராமசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசியபின் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்; இந்திய அரசியலாரின் வரிக் கொடுமைகளை வன்மையாகக் கண்டித்தார். துவக்கத்தில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள் என். வி. நடராசன் அவர்களுக்கு மலர் மாலைகள்,—கைத்தறித் துண்டுகள் அன்பளிப்பு ஆகியவைகள் வழங்கின.

இடைமணலில் வரிஎதிர்ப்பு நாள்

சீர்காழி - இடைமணல் தி. மு. கழகத் துவக்க விழாவும், காங்கிரஸ் சர்க்காரின் வரிக்கொடுமை எதிர்ப்பு நாளும் 26-5-57 மாலை 6 மணிக்கு, சிறப்புற நடந்தேறியது. சீர்காழியிலிருந்தும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். துவக்கத்தில் தோழர்கள் சோமு, கோபாலகிருஷ்ணன், வேலாயுதம் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து சொற்பொழிவாற்றுகையில் காங்கிரஸ் ஆட்சியின் கடந்தகால அநீதிகளையும், தற்போது விதித்துள்ள வரிக்கொடுமைகளையும் விளக்கிப் பேசியதுடன், வரிவிதிப்புப் பிரச்சினையின் மீது அமைச்சர்கள் மறு தேர்தலுக்கு நிற்பார்களா என்று அறைகூவல் விடுத்தார்.

துணைப் பொதுச்செயலாளருக்குப் பல கிளைகளின் சார்பில் கைத்தறித் துண்டுகள் வழங்கப்பட்டன.

சீர்காழித் தொகுதி காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரும், காங்கிரஸ் தலைவர்களும் தொலைவிலிருந்து சொற்பொழிவினைக் கேட்டனர்.

ஏற்காடு தொகுதியில் கிளைக் கழகங்கள் துவக்கப்பட்டன

என். வி. நடராசன் கலந்துகொண்டார்

மணச்சநாயக்கன் பட்டி :

சேலம் ஏற்காடு தொகுதியில் ஓமலூர் அடுத்த மணச்சநாயக்கன் பட்டி தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா 24-5-57 காலை 11 மணிக்கு நடைபெற்றது. விவசாயத் தொழிலாளர்களும், தாய்மார்களும் திரண்டிருந்தனர். தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகியோர் கழகக் கொள்கையை விவரித்துப் பேசினர்.

பின்னர், என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்தும், சர்க்காரின் வரிக் கொடுமையைக் கண்டித்தும் பேசினார். கிளைக் கழகச் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

வீராசாமி புதூர் :

ஏற்காடு தொகுதி வீராசாமி புதூரில் 24-5-57 மாலை 4-30 - மணிக்கு, தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா சிறப்புற நடந்தேறியது. தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகக் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளை விவரித்தார். கிராம மக்கள் ஏராளமாக வந்திருந்து சிறப்பித்தனர்.

பெரமனூர் :

ஏற்காடு - தொகுதி பெரமனூர் தி. மு. கழகக் கிளை 24—5—57 இரவு 7 மணிக்குத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான தோழர்களும், தாய்மார்களும் திரண்டிருந்தனர்.

தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கழகக் கொடியை ஏற்றுவித்தார்.

துவக்கத்தில் துணைப் பொதுச செயலாளரை வரவேற்று ஊர்வலமும் நடைபெற்றது. ஏராளமான மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன

ஊராண்மைக் கழக உறுப்பினர்களும், பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

இனி வீட்டுக்கு வீடு பிரச்சாரமாம் !

பெங்களூர், மே 31—

இந்தியா அரசாங்கம் நடத்தி வந்த 'காப்பி' விடுதிகள் மூடப்பட்டுவிட்டதென்றும் அவைகளின் வேலை தீர்ந்துவிட்டதென்றும் கூறப்பட்டிருக்கிறதாம்.

இனி வீடு வீடாகச் சென்று காப்பியின் உபயோகத்தை அதிகரிக்க செய்ய பிரச்சாரம் செய்வார்களாம்!

கடைத் தேங்காய் எடுத்து வழிப்....

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சர் அவர்களை—அங்கென்ன எண்ணெய் ஊறுகிறதா? பெரிய அணைக்கட்டு கட்டுவதற்குதான் பெரிய ஆறு ஓடுகிறது; எனவே கட்டுகிறார்கள்! பம்பாயிலும் கல்கத்தாவிலும் என்ன எண்ணெய் ஊறுகிறது? இங்கு மட்டும் என்ன எண்ணெய் ஊறவில்லை?

'பெட்ரோல்' உண்டு!

"காவிரியாற்று டெல்டா பிரதேசத்தில் 'பெட்ரோல்' இருக்கிறதென்று கண்டு பிடித்திருக்கிறார்கள் பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்கள். இங்கு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை வைக்கக் கூடாதா?

நீர்வளமுண்டு !

"இங்கு தண்ணீர் மட்டும் இல்லையென்று கருதுகிறீர்கள்? சர்க்காருக்கு அந்த புள்ளிவிவரம் சொல்லுகிறேன்: அதற்கு பிறகாவது உணர்ந்துகொள்ளட்டும்.

காவிரி......!

"தென்னாட்டில், காவிரியாற்றுத் தண்ணீர்தான் 100-க்கு 95 பங்கு பயன்படுகின்றது: மீதி 5 பங்கு தண்ணீர்தான் வங்காள விரிகுடாவில் போய் விழுகின்றது.

கோதாவரி— கிருஷ்ணு !

"கோதாவரி—கிருஷ்ணு நதிகளின் தண்ணீரில் 45 சதவிகிதம்தான் பயன்படுகின்றது; 55 சதவிகிதம் தண்ணீர் பயன்படாமல் வங்காள விரிகுடாவிற்குப் போகின்றது.

மேற்குத் தொடர்ச்சி மலைகள்

"மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெய்கின்ற மழை நீரிலே 85 பாகம் பயன்படவில்லை; 15 பாகம் மட்டும் தான் பயன்படுகின்றது. 85 பங்கு தண்ணீர் எதற்கும் பயன்படாமல் அரபிக்கடலில் போய் விழுகிறது.

வறண்ட மாவட்டங்களை வளமுள்ளவைகளாக்க!

"மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பல கோடி ரூபாய்கள் செலவிட்டு, பல குடைவுகள் போட்டு, அங்கு தேக்கங்கள் வைத்து, அந்தத் தண்ணீரைத் திருப்பினால், வறண்டு கிடக்கிற இராமநாதபுரம்—மதுரை— திருநெல்வேலி மாட்டங்கள் வளமுள்ள மாவட்டங்களாக ஆக்கமுடியும் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வெள்ளைக்கார எஞ்சினியர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் போட்டக் குடைவிலே ஒன்றுதான் முல்லையாற்றுப் பாசனம். அப்படிப் போட்ட குடைவின் ஒன்றிலேதான் பெரியாற்றுப் பாசனமும்—மின்சாரத் திட்டமும் வைத்திருக்கிறார்கள். அக்குடைவு போட்டது 1893ல். ஆனால் இப்பொழுது சொல்லுகிறார்கள்—அக்குடைவுகூட இன்னும் கொஞ்சம் கீழே இருக்குமானால், இன்னும் அதிகமான தண்ணீரை கொண்டு வந்துசேர்க்க வழி ஏற்படுமென்று; இன்னும் பல குடைவுகள்போட வழியிருக்கின்றது.

கேட்கிறார் அமைச்சர்

"ஆனால் இங்கிருந்து அமைச்சர் கேட்கிறார் நெடுஞ்செழியன்—அண்ணாதுரை வீட்டு சாக்கடைக்கு அணை கட்டவா என்று !

தொழிற்சாலை வைக்கக்கூடாதா?

"இத் திட்டங்களுக் கெல்லாம் பல கோடி செலவிடக் கூடாதா? நிலக்கரியில் மட்டும் 2000 துணைப் பொருள்கள் கிடைக்குமென்கிறார்கள், ஆராய்ச்சியாளர்கள். தொழிற்சாலை வைக்கக் கூடாதா?

மீன் பிடிக்கும் தொழிலை விஞ்ஞானமாக்கு !

"மூன்று புறமும் கடலுண்டு; 1700 மைல் பரப்பளவு கடற்கரையுண்டு தென்னாட்டிலே இங்கு மீன் பிடிப்பவர்கள் தொகைமட்டும் 5½ இலட்சம் பேர். மீன் பிடிக்கும் தொழிலை விஞ்ஞான முறையில் கொண்டுவந்து, ஆழ் கடலுக்குச் சென்று மீன்களை அரித்துவந்து, தொழிற்சாலை வைத்து—புட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதா !

'ஷார்க்லீவர் ஆயில்' 'காட்லீவர் ஆயில்'

"கிழக்கு கடற்கரை ஓரத்திலே 'ஷார்க்' மீன்களும், மேற்குக் கடற்கரை ஓரத்திலே 'காட்' மீன்களும் உலவுகின்றன. அவைகளைக் கொண்டுவந்து அவைகளின் ஈரல்களை எடுத்தால் 'ஷார்க் லீவர் ஆயிலும்' 'காட் லீவர் ஆயிலும்' உற்பத்தி செய்யலாம் அவைகளை இந்த நாட்டுக்குப் பயன்படுத்த முடியாதா ?

காவடி தூக்கி—சேவடி தாங்குவதுதான் திருப்பணி!

"நாங்கள் காவடி தூக்குவதும், பண்டித நேருவுக்கு சேவடி தாங்குவது தவிர்த்து'வேறென்ன திட்டம் இங்கிருக்கிறது? என்ற முறையில் கேட்கிறார்கள்.

இராசா நற்சான்று !

"அங்கு போடப்படும் திட்டங்களாவது ஒழுங்காக—உருப்படியாக நிறைவேற்றப்படுகிறதா என்றால், அதுபற்றி ஒரிசா கவர்னராயிருந்த குமாரசாமி ராஜா சில மாதங்களுக்குமுன் குறிப்பிட்டார்; — 'வடநாட்டில் நானே சில அணைக்கட்டுத் திட்டங்களை சென்று பார்வையிட்டேன்; பதறிபோனேன். தென்னாட்டில் ரூ. 10 கோடி செலவில் முடிக்கும் ஒரு அணைகட்டை அங்கு ரூ. 20 கோடி செலவிட்டு முடிக்கிறார்கள்' என்று அவர் சொன்னார்.

பணம் பாழ் ! பாழ் !!

"அங்கு ஒன்றுக்கு இரண்டாக கோடிக்கணக்கில் பணம் பாழ் படுத்துவது; அதற்கு இங்குள்ளவர்களை கசக்கிப் பிழிந்து எடுப்பதா? இங்கு கசக்கிப் பிழிந்து எடுத்து, ஒரு கோடி இரண்டு கோடி என்று வாங்கி அங்கே பக்ரா - நங்கல், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டங்களுக்கும், வீண் ஆடம்பரச் செலவுகளுக்கும் பயன்படுத்துவதா ? எவ்வளவு பணம் பாழாகியிருக்கிறது! பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தில் காண்ட்ராக்டர்கள் அடித்த 'கொள்ளை' மட்டும் ரூ. 10 கோடிக்குமேல். இப்பொழுது வழக்குகள் நடைபெற்றுவருகின்றன.

ஒருவரால் முடிப்பதை 4 பேர் கொண்டு முடிக்கும் வீரர்கள் !

" 'இங்கு ஒரு 'எக்சிகியூடிவ் எஞ்சினீயர்' இருந்து கட்டிய அணைக்கு அங்கு நான்கு 'எக்சிகியூடிவ் எஞ்சினீயர்கள் இருந்து கொண்டு கட்டுகிறார்கள்' என்று குமாரசாமிராஜா சொன்னார்.

பதவியில் இருப்பதால் சொல்வதற்கில்லை !

"இன்னும் சொன்னார், 'வட இந்திய மத்திய அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் காலம் தென்னாட்டுக்கு வந்தாலும்வரும்; 'நான் கவர்னர் பதவியிலிருப்பதால் அதிகம் சொல்வதற்கில்லை; அதை விட்டு வந்தவுடன் இன்னும் பல ருசிகரமான சம்பவங்களைக் கூறுகிறேன்' என்று சொன்னார். ஆனால் இறந்துவிட்டார்; இருந்திருந்தால் சொல்லியிருக்கக் கூடும்.

அன்றும்—இன்றும்

"இதை ஏன் குறிப்பிடுகிறேனென்றால், வெள்ளைக்காரன் காலத்திற்கும், இவர்கள் காலத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளுவதற்காகத்தான்.

"1939—40-ல், இந்தியா முழுவதும்—பாகிஸ்தானும் சேர்ந்து ஆளுவதற்கு, இந்திய சர்க்கார் நிர்வாக செலவிற்காக செலவழித்த பணம் 10 கோடி ரூபாய். இப்பொழுது நிர்வாகச் செலவு எவ்வளவு தெரியுமா? 125 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அவன் பாகிஸ்தானையும் சேர்த்து ஆண்டான் ரூ. 10 கோடி செலவில்.

"வெள்ளைக்காரன் — வெறியன் —அன்னியன் 10 மடங்கு செலவழித்தான்; நீங்கள் —'நல்லவர்கள்'—ஒரு 4 மடங்கு செலவழிக்கக்கூடாதா ?

" அகிம்சாவாதிகள் "

"அவன் காலத்தில் இராணுவச் செலவு ரூ. 45 கோடியே 18 - இலட்சரூபாய்; இந்த 'அகிம்சாவாதிகள்' காலத்தில் 253 - கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு.

இதில்கூட அவர்கள்தான் !

"வடநாடாவது தென்னாடாவது என்று கேட்பவர்களை கேட்கிறேன்—இதிலும் முக்கால் பகுதிக்குமேல் விழுங்குகிறவர்கள் வடநாட்டிலுள்ள கூர்க்கர்களும் பஞ்சாபியர்களுமே தவிர இங்குள்ள 'படையாண்ட மரபினர்களா ?

வருவாயில் சரிபாதி இராணுவம்!

வருவாயில் சரிபாதிச் செலவு இராணுவம்; அதில் சரிபாதி நிர்வாகச் செலவு; மீதி பாதி மக்களுக்கு செலவழிப்பது இப்படி ஆட்சி நடைபெறுகிறது.

ஒன்று — இரண்டா ஊழல்கள் !

"இன்னும் இவர்கள் ஆட்சியில் நிர்வாக ஊழல்கள் பட்டியல் :

"1949-ல் இந்திய 'ஹை கமிஷன'ராக கிருஷ்ணமேனன் இருந்தபோது, அவர் வாங்கியனுப்பிய 50,000 கம்பளங்கள் பயன்படாமல் போனதால் ஏலமிடப்பட்டது. அதில் ஏற்பட்ட நஷ்டம் ஒரு இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் ;

"1951—52ல் கணக்குத் தணிக்கைப்படி, இந்தியாவின் தற்காப்பு இலாகாவில் ஒழுங்கீனங்களால் ஏற்பட்ட நஷ்டம் 3 - கோடியே 18 இலட்ச ரூபாய்.

" தாமோதர் பள்ளத்தாக்கு திட்டம் வளர்ந்து வரும் விதம் பற்றி, இந்திய அரசியலாரால் நியமிக்கப்பட்ட பி. எஸ். இராவ் குழு 1954ல் அறிவித்த அறிக்கையின்படி, ஹிந்து படேல் கம்பெனியுடன் செய்து கொண்ட நியாயமற்ற ஒப்பந்தங்களால் வீணாக - அதிகப்படியாக செலுத்திய பணம் ஒரு கோடியே 19 இலட்ச ரூபாய்.

" அங்குள்ள 'கார்ப்பரேஷ'னின்

(4-ம் பக்கம் பார்க்க.)

பொதுச்செயலாளர் உரை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஒழுங்கற்ற நிருவாகத்தால் ஏற்பட்ட நஷ்டம் ஒரு கோடியே 64 இலட்ச ரூபாய்.

"இந்திய மக்கள்சபை கூட 1954-ல் விடுத்த அறிக்கையின்படி, அமெரிக்காவில் 'ட்ராக்டர்'கள் வாங்கியதில் அடிக்கடி பழுது ஏற்பட்டு ஓடாமல் நிறுத்திவைக்கப்பட்டு, வீண் விரயமானத் தொகை 95 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய்.

"ஆடிட் ஜெனரல் அறிக்கையின்படி 1948-ல் பல்வேறு அமைச்சர் நிலையங்களில் ஏற்பட்ட நஷ்டம் 29 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய்."

அவர்களுக்கு நேரமில்லை!

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை கட்டியாண்டிருக்கிறார்கள் வெள்ளைக்காரர்கள். அந்த சாம்ராஜ்யத்தில் ஒன்றாக இருந்தது இந்தியத் துணைக்கண்டம். ஒரு பிரிட்டிஷ் பிரதமருக்காவது இந்தியாவை பார்த்து வரலாமென்ற எண்ணம் வரவில்லை; பால்ட்வின் மெக்டொனல்டு, சேபர்லின், வின்ஸ்டன் சர்ச்சில், ஆட்லி இவர்கள் யாருக்கும் அந்த எண்ணமில்லை; நேரமில்லை அவர்களுக்கு சாம்ராஜ்யத்தைப் பார்க்க.

இவர்களுக்கு வேலையில்லை!

"இந்தியப் பிரதமர் பண்டித நேருவுக்கு இருக்கும் நேரம் இந்தியாவில் 3 மாதமென்றால், 7 மாதம் வெளிநாட்டில்தான்! இப்படியா சுற்றிக்கொண்டிருந்தார்கள் பிரிட்டிஷ் பிரதமர்கள்?

பரிசு பெற நேரமில்லாத சர்ச்சில்!

"தனக்குக் கொடுத்த உலகப் புகழ் பெற்ற 'நோபல்' பரிசைப் பெற நேரமில்லை சர்ச்சிலுக்கு; அங்கிருந்து 400 மைல்களுக்கு அப்பால் சென்று அந்தப் பரிசை வாங்கி வருவதால்—அந்த நேரத்தில் அரசாங்க வேலைகள் கெட்டுப் போகுமே என்று அந்தப் பரிசை வாங்கிக்கொள்ள நேரமில்லை அவருக்கு!

திராவிடம் பிரிந்தால்தான்......

"இவற்றையெல்லாம் நீங்கள் சிந்திக்கும்போதுதான் நண்பர்களே, திராவிட நாடு பிரிந்தால்தான் இந்த நாட்டின் நிலைமை வளருமே தவிர, இல்லையேனில் வழியேயில்லை.

தேசீயத்துவம் பயன்பட்டதா?

"ஒன்று நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள்,

"அகில இந்திய ரீதியிலே தேசியத்துவம் வெள்ளைக்காரனை எதிர்ப்பதற்கு பயன்பட்டது—ஒப்புக்கொள்கிறேன்.

"ஆனால், அகில இந்திய தேசியத்துவம், வெள்ளைக்காரன் சென்றதற்குப் பிறகு, தென்னாட்டை வாழவைக்கப் பயன்படவில்லை—பயன்படாது; வரிகளை டில்லியில் குவிப்பதற்கு பயன்பட்டது; அதிகாரங்களை டில்லியில் குவிக்கப் பயன்பட்டது அகில இந்திய தேசியத்துவம்!

"அகில இந்திய தேசியத்துவம் வடக்கே அணைகளை கட்டுவதற்குப் பயன்பட்டது-தென்னாட்டின் வரிப் பணத்தில்.

"அகில இந்திய தேசியத்துவம் வடக்கே பல தொழிற்சாலைகளை அமைக்கப் பயன்பட்டது—இந்த நாட்டின் வரிப் பணத்தைக் கொண்டு.

"ஒரு காலத்தில் திராவிடம் பிரிந்தாலும்கூட வடநாடு வாழும் நாடாகத்தான் இருக்கும்; தென்னாடு தேய்ந்த நாடாகத்தான் இருக்கும். அவ்வாறு அறிந்தே செய்துவருகிறார்கள்.

"வடநாட்டில் இருந்துவரும்எவரும், வட்டிக்கடை-துணிக்கடை-கப்பல் வாணிபம் போன்றவை உள்ளவர்களாகத்தான் வருகிறார்கள். ஆனால் இந்த நாட்டு குடிமக்கள்தான் இலங்கையிலும், பர்மாவிலும், மலேயாவிலும், சிங்கப்பூரிலும், தென்னாப்பிரிக்காவிலும், நீக்கோபார் தீவிலும் கூலிகளாக வாழ்கிறார்கள். இப்பொழுது இலங்கையில் தமிழ் மக்களுக்கு குடியுரிமை தர மறுத்து இங்கு துரத்துகிறார்கள் அங்குள்ள ஆட்சியாளர்கள். ஓடிவரும் மக்களுக்கு பாதுகாப்புகூட கொடுக்க முன்வரவில்லை இந்த சர்க்கார். இதையெல்லாம் நீங்கள் சிந்தித்து—தீர்ப்பளிக்க வேண்டும். நாட்டுக்கு நல்ல பல பணிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"1950-ல் இலண்டன் துறைமுகத்திலிருந்து நீண்ட நாளைய குத்தகையில் கட்டிடங்கள் வாங்கி பணிஏதும் நடைபெறாததால், நீண்ட நாளைய முன்பணமாக விரயமான தொகை 2 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாய்.

"முன் பணம் பெறாமல், இந்தியத் தூதுவர் அலுவலகத்தின்மூலம் வெளிநாட்டுக்கு இரும்பு—உருக்குச் சாமான்கள் அனுப்பியதில், கைநழுவிபோன பாக்கி 3 இலட்சத்து 62 ஆயிரம் ரூபாய்.

"1947-48-ல் அரசாங்கத்துக்கு சாமான்கள் கொடுப்பதற்கு காண்ராக்டர்கள்—ஆடிட் ஆபீஸ் குமாஸ்தா இவர்களின் மோசடித் தொகை 1,29,123 ரூபாய்.

"இரசாயன எரு தொழிற்சாலைக்கு ரூ. 22 கோடி சர்க்கார் செலவழித்ததில், தனிப்பட்ட கம்பெனி தனது மூலமாக மாற்றிக்கொண்ட தொகை ரூ. 13 கோடி.

"அமெரிக்கர்கள் உலகப் பெரும்போர் முடிந்தவுடன் ரூ. 19 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள சாமான்கள் விட்டுச் சென்றதை, ரூ. 63 ஆயிரத்திற்கு விற்றதில் ஏற்பட்ட நஷ்டம் 18 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய்.

"சமஸ்தான மன்னர்களின் பொதுப் பணத்தை (இணைப்புக்கு முன்னால்) மாற்றிக் கொண்டதால் ஏற்பட்ட நஷ்டம் 14 கோடியே 89 இலட்ச ரூபாய்.

"சமஸ்தான மன்னர்கள் உரிமையின்றி ரொக்கச் சொத்துக்களை பிடுங்கிக் கொண்டதால் ஏற்பட்ட நஷ்டம் 7 கோடியே 17 இலட்ச ரூபாய்; அவர்களே 'சிவில் ஜாப்தா' வைபெருக்கிக் கொண்டதால் ஏற்பட்ட நஷ்டம் ரூ. 1,16,95,000. மன்னர்களின் கணக்குகள் வராமல் பதுக்கிக்கொண்ட கொண்ட தொகை 2 கோடியே 56 இலட்ச ரூபாய்.

இப்படி வரிசையாக பட்டியலை வைத்திருக்கிறேன்; ஒன்று இரண்டல்ல எழுதி வைத்திருப்பது. இப்படி நூற்றுக் கணக்கான ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களாக பாழாகிறது பணம்; நம்மை வரிபோட்டு கசக்கிப் பிழிகிறார்கள். இந்த வரிகள் இத்துடனும் நிற்கப் போவதில்லை இனினும் போடவிருக்கிறார்கள். இவை நமக்குப் பயன்படுகிறதா என்றால் நமக்குப் பயன்படுவதற்கு அல்ல.

இவர்கள் இலட்சணம்

"மத்திய சர்க்கார்தான் அப்படி இவர்கள் - சென்னை சர்க்கார்?

"அண்மையில் நேரு சென்னை வந்து டில்லி திரும்பியதற்கு, சென்னை சர்க்காருக்கு செலவு எவ்வளவு தெரியுமா? $10\frac{1}{2}$ இலட்சம் ரூபாய்.

"தீபாவளி கொண்டாடுவதற்கு இராசேந்திர பிரசாத் டில்லியிலிருந்து சென்னை வந்து மதுரை-கள்ளிப்பட்டிவரை சென்று வா

தோழர் ஜோசப்

தூத்துக்குடி முன்னணி வீரர் தாளமுத்து கொலை செய்யப்பட்டதையொட்டி 151-வது பிரிவின் கீழ் 24—5—57ல் கைது செய்யப்பட்டு செங்கற்பட்டிலிருக்க வேண்டுமென்ற நிபந்தனை ஜாமீனில் விடப்பட்ட தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜோசப் 17—6—57ல் தூத்துக்குடி கோர்ட்டில் ஆஜராக வேண்டியிருப்பதால் செங்கற்பட்டிலிருந்து 5—6—57 புதன்கிழமை புறப்பட்டு 6—6—57 வியாழன் பகல் 12 மணி அளவில் தூத்துக்குடி போய்ச் சேர்வார் என்று தெரிகிறது.

பன்மொழிப் புலவர்

அப்பாதுரையார்

"பன்மொழிப் புலவர் - அப்பாதுரையார் அவர்கள் உடல் நலம் குன்றி படுத்த படுக்கையாக இருப்பதால், அவர் ஒப்புக்கொண்ட பொதுக்கூட்டங்கள், மண விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாத நிலையிலிருக்கிறார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தோழியர் அலமேலு அப்பாதுரையார் அவர்கள் அறிவிக்கிறார்.

இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

"9—6—57 ஞாயிறு மாலை 3 மணிக்கு, திருவில்லிப்புத்தூர் 'முசாபரி பங்களா'வில் இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது, மாவட்ட மாநாட்டிற்கு வரவேற்புக் குழு அமைத்தல், வரவு - செலவு கணக்குகள் சரிபார்த்தல், மற்றும் சில முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மாவட்ட குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திர பாண்டியன் அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை சர்க்கார் செலவு 11-இலட்சம் ரூபாய்.

"இங்கிருக்கும் மந்திரிகள் ஒரு மாதத்தில் 20 நாட்கள் சுற்றுகிறார்கள்; இவர்களோடு போலீஸ் அதிகாரிகள் அத்தனை பேரும் சுற்றுகிறார்கள்.

"திறமை வாய்ந்த போலீசார் சென்னையிலுள்ளவர்கள்; ஆனால் மந்திரிகளின் பின்னால் சுற்றுவதே வேலை! சமீபத்தில் நேரு நெய்வேலி வந்தபோது 900-போலீசார் ஊளுந்தூர் பேட்டைக்கு மட்டும் வந்திருந்தார்கள்.

"இவர்களை கண்காணிக்க போலீஸ் அதிகாரிகள் காருக்கு பெட்ரோலை ஊற்றிக்கொண்டு சுற்ற ஒரு அதிகாரிக்கு ஒரு மைலுக்கு 9 அணா 'பேட்டா'.

எதை நீக்கிக் கொண்டார்கள்?

"வெள்ளைக்காரன் செய்த எந்த ஆடம்பரத்தை இந்த 'நல்லவர்கள்' குறைத்துக் கொண்டார்கள். அவன் செய்த ஆடம்பரத்தைப் பற்றிப் பேசுகையில், 'ஏன் இத்தகைய ஆடம்பரச் செலவுகள்; யாருடைய வரிப்பணமென்று நினைத்துக்கொண்டான் வெள்ளைக்காரன்; ஏன் எங்கு பார்த்தாலும் இந்த 'செந்தலைப் பூச்சிகளை' நிறுத்திவைத்திருக்கிறான். (போலீஸ்காரர்களுக்கு இவர்கள் அப்பொழுது கொடுத்த பெயர் 'செந்தலைப் பூச்சிகள்.') என்று கேட்டார்கள்.

"அவன் காலத்தில் அவன் கொடுத்த பட்டத்தை எதிர்த்த இவர்கள், ஒரு இரண்டு ஆண்டுகள்தான் அந்த 'அரிப்பு' இல்லாமல் இருக்க முடிந்தது!

தாளமுத்து கொலை எதிரொலி

கம்யூனிஸ்டு நீதிராசன் விருதுநகர் நீதிபதியிடம் சரண்

மற்றொருவரும் அவருடன் சரணடைந்தார்

விருதுநகர், ஜுன் 3—

தூத்துக்குடி கழக வீரர் தாளமுத்து படுகொலை வழக்கில் முக்கிய எதிரிகள் என்று கூறப்படும் கம்யூனிஸ்டு கட்சிக்காரரான நீதிராஜன் என்பவரும், மற்றும் ராமநாதன் என்பவரும் இன்று மாலை விருதுநகர் 'ஜுடிஷியல் சப்மாஜிஸ்திரேட்' முன் சரணடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவர்களை ரிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

பாதுகாப்பு நோக்குடன்

கழகத் தோழர் கைது

தூத்துக்குடி, ஜுன் 3—

தூத்துக்குடியில் தோழர் தாளமுத்து படுகொலை செய்யப்பட்டபின், பாதுகாப்பு நோக்குடன், நகர தி. மு. க. தோழரும், நகரசபை உறுப்பினருமான தோழர் ராமலிங்கம் அவர்கள் 151 கி. பி. கோ. பிரிவுப்படி கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டு தோழர் சுடலை இவர்கள், தூத்துக்குடியிலிருந்து மதுரை வந்து தலைமறைவாக இருந்ததாகவும், கூறப்படுகிறது.

இவர்கள் சரணடைந்த மூன்றாந் தேதியன்று கம்யூனிஸ்டு 'பொலிட்பீரோ' உறுப்பினர் தோழர் பி. ராமமூர்த்தி மதுரைக் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக காலையே மதுரை வந்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

முத்துவின் நண்பரும் கம்யூனிஸ்டு அனுதாபியுமான நடராஜனுக்கு ஜாமீன் அனுமதி மறுக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

கழகத்தோழர்கள் விடுதலை

குற்றவாளிகள் அல்லவென தீர்ப்பு

கம்யூனிஸ்டுகள் தொடர்ந்த வழக்கு தோல்வி!

மதுரை ஜுன் 1—

இங்கு கம்யூனிஸ்டுக் கட்சியைச் சார்ந்த டைலர் சிதம்பம் என்பவரை தாக்கியதாக, கழகத் தோழர்கள் பவுல், சுப்பையா, பூக்கன், வளர்ந்தான் பாண்டி ஆகியோர்மீது கம்யூனிஸ்டுகளால் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த மாஜிஸ்ட்ரேட் அவர்கள் கழகத் தோழர்கள் நால்வரும் குற்றவாளிகள் அல்லவென்று தீர்ப்பு கூறி விடுதலை செய்தார்.

சோஷலிஸ்டுகள் போராட்டம்

2,500 பேர் கைது

ஐதராபாத், ஜுன் 3—

மே 10-ம் தேதி துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கப் போராட்டங்களில் இதுவரை சுமார் 2,500 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம். உ. பி போராட்டத்தில் பங்குகொள்ள மொத்தம் 8,000 தொண்டர்கள் கையொப்பமிட்டுள்ளனராம். இந்தத் தகவலை இந்திய சோஷலிஸ்டு கட்சித் தலைவர் சாக்சேனா தெரிவித்துள்ளார்.

கழகக் கூட்டம்

★

சிங்கம்புணரி:

(இராமநாதபுரம் மாவட்டம்)

ஊராட்சி மன்ற பூங்காவின் அருகில்

6—6—57 அன்று மாலை

பேசுபவர்:

க. அன்பழகன் எம்.எல்.ஏ.

★

நாகூர்:

சிவன் தெற்கு வீதியில்

6—6—57 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

சத்தியவாணிமுத்துஎம்.எல்.ஏ.

★

அலமேலுபுரம் (பூண்டி):

6—6—57 அன்று

தி. மு. கழகத் திறப்பு விழா

தலைவர்: பட்சிராசன்

பேசுவோர்:

அண்ணு

அன்பில்-தருமலிங்கம்

காப்பி, தேனீர் விலை குறைக்கப்படுகிறது

சென்னை, ஜுன் 4—

மே 15-ம் நாள் மத்திய அரசாங்கம் அறிவித்திருந்த புதிய வரிகளின் காரணமாக, சிற்றுண்டி சாலைகளில் காப்பி, தேனீர் விலையை 'கப்' ஒன்றுக்கு அரையணா உயர்த்தப்பட்டது தெரிந்ததே.

இந்த விலை உயர்வை உடனே ரத்து செய்து விடும்படி சென்னை சிற்றுண்டி சாலைகளின் சங்கம் அறிவித்துள்ளது.

இனி காப்பி, தேனீர் பழையபடியே கப் ஒன்றுக்கு இரண்டு அணா வீதம் விற்கப்படும்.

நடமாடும் மருத்துவ நிலையங்கள்

வீதிகள்தோறும் வீடுகள்தோறும் சென்று சிகிச்சை அளிக்கும்

சென்னை, மே 31—

சென்னை நகரில் பரவிவரும் விஷக் காய்ச்சலைத் (இன்புளுயன்ஸா) தடுப்பதிலும், பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மருந்துவ உதவி யளிப்பதிலும் சென்னை நகர சபை தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இன்று முதல் மூன்று நடமாடும் வைத்திய நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவையான மருந்துகளுடன் டாக்டர்கள், நர்சுகள் மோட்டார் கார்களில் தெருத் தெருவாக—வீடு வீடாகச் சென்று, இலவசமாக தேவையான மருந்துகளைக் கொடுத்து சிகிச்சை அளிப்பர்.

மேலும், நகரசபை நடத்திவரும் மருத்துவ விடுதிகள் அனைத்தும் எல்லா நோயாளிகளுக்கும் மருந்து கொடுக்கப்பட்ட பின்னரே மூடப்பட வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.